நன்னிலம் தொகுதி –

# வலங்கைமான் பேரூராட்சியில் பேருந்து நிலையம் : இந்த ஆண்டே கட்டித் தரப்படும்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் கே.என்.நேரு தகவல்!

சென்னை, ஏப். 19-

சட்டப் பேரவையில் நன்னிலம் தொகுதி அ.தி.மு.க. உறுப்பினர் இரா.காமராஜ் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-

**இரா.காமராஜ்:** திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் பேரூராட்சி நிறைய கிராமங்களை உள்ளடக்கி நடுநாயகமாக விளங்குகிறது. நீண்ட நாள் அங்கு பேருந்து நிலையம் இல்லாமல் பொது மக்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் பேரூராட்சியில் பேருந்து நிலையம் அமைத்துத் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை கேட்டு அமர்கிறேன்.



**அமைச்சர் கே.என்.நேரு:** வலங்கைமான் பேரூராட்சியில் இடம் இருந்தால் சொல்லுங்கள். இந்த ஆண்டே பேருந்து நிலையம் கொடுப்பதற்கு நிதி இருக்கிறது. இடம்தான் எங்களுக்கு பிரச்சினை. ஏனென்றால், பேரூராட்சியாக இருந்தாலும் நகராட்சியாக இருந்தாலும் நேரடியாக நிலத்தை கையகப் படுத்துவதிலே பல சிரமங்கள் இருக்கிறது. அதற்கு அதிகமான நிதி செலவழிக்கப்பட வேண்டி இருக்கிறது. புறம்போக்கு நிலம் இருக்குமானால் அதை பேரூராட்சிக்கு சொந்தமான நிலமாக இருக்குமானால் உடனடியாக எடுக்கப்படும். அதிகபட்சம் பேருந்து நிலையம் அமைப்பதற்கெல்லாம் பேரூராட்சி அளவிலே நான்கு கோடி, ஐந்து கோடி இருந்தாலே பேருந்து நிலையத்தை நல்ல முறையில் அமைத்துத் தந்து விட முடியும். எனவே, உறுப்பினர் அவர்கள், ஏற்கெனவே அமைச்சராக இருந்த வர்கள். அந்தத் தொகுதியிலே தொடர்ந்து நீங்கள் வெற்றி பெற்று வருகிறீர்கள். இடம் பார்த்து கொடுத்தீர்களானால் இந்த ஆண்டே கட்டித் தருகிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.



கழக தலைவர் அவர்கள் ஆணைக்கிணங்க இளந்தலைவர் அவர்கள் வழிகாட்டுதலோடு கழக மாணவர் அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் நடைபெற்றது. உடன் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, கழக மாணவர் அணி துணைச் செயலாளர்கள் தமிழ்.க.அமுதரசன், ராமகிருஷ்ணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.



காரைக்கால் மாநில தி.மு.க. பொறியாளர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தொகுதி கழக அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் கடந்த 12.4.2025 அன்று காரைக்காலில் நடைபெற்றது. இதில் பொறியாளர் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வி.எல். ரவிச்சந்திரன், பொறியாளர் அணிக்கான மாநிலக் கழக தொகுதி கழக அமைப்பாளர்கள் – துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணலை நடத்தினார். இதில் ஏ.எம்.எச். நாஜிம் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். தியாகராஜன் முன்னிலை வகித்தார். இதில் அன்சாரி, சீனிவாசன், அம்பை சரவணன், பா. பெரியார் ஜவகர், வீரதாசன், பார்த்திபன், ஜாகிர் உசேன், ஜாபர் அலி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# வேலூர் மாவட்டம் காட்பாடியில் 5 இடங்களில் நீர்மோர் பந்தல்!

## டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. திறந்து வைத்தார்!

வேலூர், ஏப்.19-

வேலூர் மாவட்டம் காட்பாடியில் 5இடங்களில்நீர் மோர்பந்தலை நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த் திறந்து வைத்தார். காட்பாடி செங்குட்டை பகுதியில் நடந்த நிகழ்ச்சிக்கு வடக்கு பகுதி செயலாளர்வன்னியராஜா தலைமை தாங்கினார். துணை மேயர் எம்.சுனில்குமார்,மண்டல குழு தலைவர் புஷ்பலதா, மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கமல்ராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாமன்ற உறுப்பினர் அன்பு அனைவரையும் வரவேற்று பேசினார்.

இதில் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி மாநில தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டி.எம்.கதிர்ஆனந்த் கலந்து கொண்டு நீர், மோர் பந்தலை திறந்து வைத்தார் .பொதுமக்களுக்கு மோர், தர்பூசணி, இளநீர் ஆகியவற்றை வழங்கினார்.

இதேபோல் வள்ளிமலை கூட்ரோடுபகுதியில் நடந்த தண்ணீர் பந்தல் திறப்பு விழாவிற்கு பொதுக்குழு உறுப்பினர் லோகநாதன் தலைமை தாங்கினார்.சித்ரா

லோகநாதன் முன்னிலை வகித்தார்.மற்றும் சித்தூர் பஸ் நிறுத்தம், அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, தாராபடவேடு மண்டல அலுவலகம் உட்பட 5இடங்களில்நீர்மோர் பந்தலை திறந்து வைத்தார்.

சட்டமன்றத்தில் கோவில் பூசாரிகளுக்கு பல்வேறு நலத் திட்டங்கள் அறிவிப்பு!

# முதல்வருக்கும் - இந்து சமய அறநிலையத் துறை அமைச்சருக்கும் நன்றி!

## கோவில் பூசாரிகள் நலச்சங்க மாநிலத் தலைவர் பி.வாசு அறிக்கை !

சேலம், ஏப்.19-

கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி. வாசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் சட்டமன்ற அறிவிப்பின் மூலம் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் வரவேற்கத்தக்கவை.

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில் இலவச மிதிவண்டிகள்வழங்கப்பட்டன. அவை பழுதடைந்து விட்ட காரணத்தினால் பூசாரிகளுக்குஇருசக்கர வாகனங்கள் வாங்க 10,000 பூசாரிகளுக்கு தலா ரூ.12000 வீதம் மானியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கத்தக்கது. இதன்மூலம் ஒரு கால பூஜைநடைபெறும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோவில்களில் பணியாற்றும்பூசாரிகள் மற்றும் கிராம கோவில் பூசாரிகள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள பூசாரிகள் பலனடைவார்கள்.

அரசு கட்டுப்பாட்டில் உள்ள ஒரு கால பூஜை நடைபெறும் திருக்கோவில்களுக்கு பூஜை உபகரணப் பொருள்கள் சுமார் ரூ.15 கோடி செலவில் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது. ஒரு கால பூஜை திட்டத்தை விரிவுபடுத்தும் வகையில் மேலும் 1000 கோயில்களையும் சேர்த்து 19 ஆயிரம் ஆக உயர்த்தியதும் வரவேற்கத்தக்கது.

அரசு கட்டுபாட்டில் உள்ள ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் பணியாற்றும் பூசாரிகளுக்கு மாதம் ரூ.1000 ஊக்கத்தொகை வழங்கப்பட்டு வந்த நிலையில்தற்போது அதை ரூ.1500 ஆக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளதும்வரவேற்கத்தக்கது.

ஒரு கால பூஜை நடைபெறும் அரசு கட்டுப்பாட்டில் உள்ள திரு க்கோவில்களில்பணியாற்றும் பூசாரி களுக்கு தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் புத்தாடை கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

கோவில் பூசாரிகள் நிலச் சங்கத்தின் நீண்ட கால கோரிக்கையான ஆடி மாதங்களில் அம்மன் கோவில்களில் கூழ் வார்க்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கை நடைமுறைப்படுத்தப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்பதக்கது. பூசாரிகள் குடும்ப நல நிதி ரூ.3 லட்சத்திலிருந்து ரூ.4 லட்சமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

ஓய்வு பெற்ற கிராம கோவில் பூசாரிகள் ஓய்வூதியம் பெறுவதற்கு இருந்து வந்த எண்ணிக்கை வரம்பை நாலாயிரத்தில் இருந்து ஐந்தாயிரம் ஆக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

பூசாரிகள் ஓய்வூதியம் பெறவும் நல வாரியத்தின் மூலம் நலத்திட்டங்களைப் பெறவும் இருந்து வந்த வருமான உச்சவரம்பை ரூ.72 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது. பூசாரிகள் நல வாரிய உறுப்பினர்களுக்கு மாத ஊக்கத்தொகை ரூ.1500 வழங்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

கிராம கோவில் பூசாரிகள் பூஜை முறைகளில் சிறந்து விளங்க அவர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சி ஒரு வார காலம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

சேலத்தில் தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் மேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற தாங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்புக்கு தங்களுக்கும் இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மாதவரம் வடக்கு பகுதி இளைஞரணி சார்பில்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர் எம் என். அஜய் தென்னவன் ஏற்பாட்டில்,3 டன் தர்பூசணி பழங்களுடன் நீர் மோர் பந்தல் திறப்பு விழா, 17 வது வட்டம் வடபெரும்பாக்கம் கன்னியம்மன் கோயில் அருகே நடைபெற்றது. மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர். டி. மதன்குமார் ஆகியோர் நீர் மோர் பந்தலை திறந்து வைத்து, பொது மக்களுக்கு இளநீர், தர்பூசணி, கிர்ணி பழம், வெள்ளரிக்காய், ரோஸ் மில்க், நீர் மோர், குளுக்கோஸ் ஆகியவற்றை வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் 17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் தலைமையில் சி. எஸ்.எஸ். டி. சீனிவாசன், கேபிள் த.வ. கணேசன், மாத்தூர் தாமரைச்செல்வன், மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, ர.விஜய் ஆனந்த், மாதவரம் வினோத், மணலி ஸ்டாலின், புழல் யுவராஜ், சோழவரம் மணிகண்டன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்.

